பதிப்புரிமை ஆசிரியருக்கே / *All Rights to Author*

# தமிழ்வழி பரீட்சைகள்

## முதலாம் தவணைப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்
## First Term Examination - Model Paper

தரம் 09

தமிழ் மொழியும் இலக்கியமும் I,II
Tamil Language and Literature I,II

இரண்டு மணித்தியாலம்
Two hours

ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil
077 2400 707 / 076 8044 959
மல்லாவிக் கஜன் (ஆதித்தியன்)
Group e.way தமிழ்வழி

தமிழ் இனிது கல்வி நிலையம்
பாலிநகர், வவுனிக்குளம்
புவியியல் ACCOUNTING WORLD
2ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
புவியியல், தமிழ் பிரத்தியேக வகுப்புக்கள்

சுட்டெண்: ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 20** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் இவ் வினாத்தாளிலேயே எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- **பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- அறிவுறுத்தலுக்கு அமைவாகப் **பகுதி II** வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி **I** மொத்தப் புள்ளிகள் [ ]

பகுதி **II** மொத்தப் புள்ளிகள் [ ]

இறுதிப் புள்ளிகள் [ ] / **100**

## பகுதி / Part - I

**01. 1 – 20 வரையான ஒவ்வொரு வினாக்களிலும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**1.** “எனக்குக் களங்கத்தை உண்டு பண்ணாதே” - இங்கு **களங்கம்** என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
(1) அகளங்கம் (2) குற்றம் (3) நிஷ்களங்கம் (4) மறை

**2.** “மதம் கொண்ட மனிதன் மூர்க்கம் கொண்டான்” - இங்கு **மூர்க்கம்** என்பதன் ஒத்த சொல் **அல்லாதது.**
(1) கோபம் (2) சினம் (3) ஆத்திரம் (4) மகிழ்ச்சி

**3.** “பாணன் பாடிப் பரிசு பெற்று வந்தான்” - இங்கு **பாணன்** என்பதன் எதிர்ப்பாற்சொல்.
(1) பாணினி (2) பாடினி (3) பாங்கி (4) பாடகி

**4.** “இராமன் கானகம் நோக்கிச் சென்றான்”- இங்கு **கானகம்** என்பதன் ஒத்த சொல்.
(1) சுரம் (2) அசலம் (3) அளகம் (4) கிருபை

**5.** “…தொடைகீறி வருக்கை போழ்ந்து” - இங்கு **வருக்கை** என்பது.
(1) வளம் (2) பலாப்பழம் (3) மாங்கனி (4) சோலை

**6.** குழல், கேசம், அளகம் எனப் பலபொருள் குறிக்கும் **ஒரு சொல்.**
(1) ஆற்றல் (2) மலை (3) கூந்தல் (4) நீர்

**7.** குயில் கூவும் : **மயில்,**
(1) அலறும் (2) ஆடும் (3) அகவும் (4) இரையும்

**8.** **எண்பதாவது** ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா.
(1) அமுத விழா (2) வைர விழா (3) பவள விழா (4) வெள்ளி விழா



தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

**9.** தற்போது உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு அதிக **டிமான்ட் (Demand)** உண்டு'' - இங்கு **டிமான்ட்** என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் **பொருத்தமான** கலைச்சொல்.
(1) வரவு (2) கேள்வி (3) நிரம்பல் (4) பெறுமதி

**10.** ஒரு கருமத்தை இலகுவில் நிறைவேற்றும் பொருட்டு, அதனுடன் தொடர்புடைய ஒருவருக்குக் கொடுக்கப்படும் இலஞ்சம் - அழைக்கப்படுவது.
(1) வெகுமதி (2) கைம்மருந்து (3) கையூட்டு (4) கப்பம்

**11.** "யார் சிறந்தவர்'' – என்ற பாடப்பகுதி எத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?
(1) புதுப்புனல் (2) வான் துளிகள் (3) நெஞ்சே அஞ்சாதே நீ (4) தமிழ் மரபு

**12.** "கறிக்குத் தூவப்பட்ட மிளகாயது பொடி காரமானது'' - இங்கு '**மிளகாயது பொடி**' என்பது.
(1) ஐந்தாம் வேற்றுமை ஆகும். (2) ஏழாம் வேற்றுமை ஆகும்.
(3) ஆறாம் வேற்றுமை ஆகும். (4) எட்டாம் வேற்றுமை ஆகும்.

**13.** "இளந்தளிர்கள் சட சடவென ஒடிந்து கொண்டிருந்தன'' - இங்கு '**சட சட**' என்பது.
(1) இரட்டை மொழி (2) அடுக்கிடுக்கு மொழி
(3) அடுக்கு மொழி (4) இணைமொழி

**14.** "கந்தன் வெள்ளை பூட்டி உழுதான்'' - இங்கு இடம்பெற்றுள்ள ஆகுபெயரின் வகையாக **அமைவது.**
(1) குணவாகு பெயர் (2) இடவாகு பெயர்
(3) காலவாகு பெயர் (4) தொழிலாகு பெயர்

**15.** பெயர்ச் சொல்லும், பெயர்ச் சொல்லும் சேர்ந்தமைந்த கூட்டுப்பெயர்.
(1) ஏவுகணை (2) பறிமுதல் (3) தொலைக்காட்சி (4) சுடுகாடு

**16.** **அறிவாளி** - என்ற ஆக்கப்பெயரின் விகுதி.
(1) வாளி (2) ஆளி (3) ளி (4) அறிவு

**17.** **அவள்** - என்ற சொல் உணர்த்தும் இலக்கணக்கூறு.
(1) அ.்.றிணை, பெண்பால், பன்மை, படர்க்கை
(2) உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை
(3) உயர்திணை, பெண்பால், பன்மை, படர்க்கை
(4) அ.்.றிணை, பெண்பால், ஒருமை, தன்மை

**18.** பின்வருவனவற்றுள் கூட்டுவினையாக **அமைவது.**
(1) சுட்டிக்காட்டு (2) மின்சாரம் (3) நீர்வீழ்ச்சி (4) வகுப்பறை

**19.** செயப்படுபொருள் குன்றிய வினை வாக்கியத்திற்கு **உதாரணம்.**
(1) குமரன் நடந்து சென்றான்.
(2) குமரன் இனிமையாகப் பாடினான்.
(3) குமரன் பாட்டுப் பாடினான்.
(4) குமரன் படித்தான்

**20.** கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் **பொருத்தமான** வைப்பு முறையைத் தெரிவு செய்க.
(அ) அதனால், மக்கள் பெரும்பாலும் நன்மையில் நாட்டமும், தீமையில் அச்சமும் உடையவராய் வாழ்ந்தார்கள்.
(ஆ) மாந்தரை ஒழுக்க நெறியில் நிறுத்துவதற்கு நாடகம் ஒரு சிறந்த கருவியாகும் என்பர்.
(இ) உயிர்க்கு நலம் பயக்கும் உயரிய உண்மைகளைக் கொண்ட கதைகளே முற்காலத்தில் நாடக மேடைகளில் நடிக்கப்பட்டன.
(ஈ) நல்ல நாடகங்களைக் காணும் மக்கள், அறத்தாறறிந்து ஒழுகத் தலைப்படுவர்.
(1) ஆ, இ, ஈ, அ (2) ஆ, இ, அ, ஈ
(3) ஆ, ஈ, இ, அ (4) அ, இ, ஈ, ஆ

**(20 X 2 = 40 புள்ளிகள்)**



தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

## பகுதி / Part – II

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(அ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
(ஆ) எண்ணங்களே ஒருவனை உருவாக்குகின்றன
(இ) மரம் வளர்த்து வரம் பெறுவோம்
(ஈ) நான் கண்ட மலையகம் **(18 புள்ளிகள்)**

**03.** உமது கிராமத்தில் அடிக்கடி இடம்பெறும் மின் துண்டிப்புக் காரணமாகக், கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்வைத்தும், அதனை நிவர்த்திசெய்து தருமாறு கோரியும், பிராந்திய மின்சார சபையின் முகாமையாளருக்கு **75** சொற்களுக்குக் குறையாமல், ஒரு **கடிதம்** எழுதுக.

**(12 புள்ளிகள்)**

**04. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன என்பதை எழுதுக.**

(i) "என்ன நடந்தது? இதற்கிடையில் கலீபாவிடம் முறையிட்டவர்கள் யார்?"
(ii) "இந்த மல்லிகை மொட்டுகளைப் பறித்து, அழகான இரு மாலைகள் தொடுத்து வை"
(iii) "உட்காருங்க, வாழைப்பழம் இப்ப வந்திடும் சாப்பிடலாம்"
(iv) "அதுதான் சொன்னேன். உனககுத்தான் தோல்வி!"
(v) "இப் பெண்ணை நீ மனைவி ஆக்கிக்கொள்ள விரும்புகிறாயா?"

**(10 புள்ளிகள்)**

**05. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

(i) தன்வினை, பிறவினை என்பவற்றை வேறுபடுத்துக.
(ii) படர்க்கைப் பெயர்களுள், விளியுருபை ஏற்று **வராத** பெயர்கள் **மூன்று** தருக.
(iii) குறித்த மாணவன், தமிழ்ப்பாட வேளையில் கற்றலில் அக்கறை செலுத்தாது இருந்தமைக்கான காரணமாக, ஆசிரியர் கூறுவது என்ன?
(iv) ரோஜாவின் கர்வத்திற்கான காரணம் யாது?
(v) பந்தியொன்றை விரித்து வளர்ப்பதற்கான வழிமுறைகள் **நான்கு** தருக. **(10 புள்ளிகள்)**

**06. (ஆ) பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் புலப்படுமாறு ஒவ்வொரு வாக்கியம் அமைக்குக.**

(i) மேடு பள்ளம்
(ii) இரை
(iii) சுடச் சுட
(iv) இலவுகாத்த கிளி போல
(v) மூலை முடுக்கு **(05 புள்ளிகள்)**

**(ஆ) வழு நீக்கி எழுதுக.**

அந்தி சாயும் நேரம். பகல் முழுவதும் வெப்பக் கதிர்களை விசிய பகலவன், தன் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்காக கடற்கண்ணியின் அரைவணைப்பை நாடினான். மேற்கு வாணம் செம்பிளம்பாகக் காட்சியளித்தது. **(05 புள்ளிகள்)**


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்

## பகுதி I விடைகள்

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|
| 1 | 3 | 11 | 2 |
| 2 | 4 | 12 | 3 |
| 3 | 2 | 13 | 1 |
| 4 | 1 | 14 | 1 |
| 5 | 2 | 15 | 3 |
| 6 | 3 | 16 | 2 |
| 7 | 3 | 17 | 2 |
| 8 | 1 | 18 | 1 |
| 9 | 2 | 19 | 1 |
| 10 | 3 | 20 | 3 |


தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள் தமிழ்வழி பரீட்சைகள்